**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழுவின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆணைக்குழுவின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் ரூபா 13,339,684,395 தொகை நிதிக்கூற்றுக்களில் காணப்பிக்கப்பட்ட போதிலும், இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம் அதன் நியாயமான பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை . | ஏற்றுக்கொள்கின்றோம். வரைவு நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு கொள்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வு குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் இணக்கப்பாட்டிற்காக அனுப்பப்பட்டுள்ளதுடன், இணக்கப்படாடு கிடைத்ததும் உடனடியாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதியின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட போதும், தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற ரூபா 12,978,983 தொகையான நிலையான சொத்துக்கள் கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் மீள்மதிப்பிடப்பட்டு | ஏற்றுக்கொள்கின்றோம். வரைவு நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு கொள்கை தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் இணக்கப்பாட்டிற்காக அனுப்பப்பட்டுள்ளது. அந்த இணக்கப்பாடு கிடைத்ததும் உடனடியாக அதன் | சொத்துக்களை மீள் மதிப்பிட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை . | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதிசேர் வரி பொறுப்புக்கள் ரூபா 43,145,810 தொகை குறைவாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பெறுமதிசேர் வரி பெறுமதியில் சரியான முறையில் 2020 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் கடந்த ஆண்டுகளில் பெறுமதிசேர் வரிக் கணக்கு பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆரம்ப மீதியின் வேறுபாட்டை அவதானிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம். | நிதிக் கூற்றுக்களில் பெறுமதிசேர் வரி பெறுமதி சரியாக காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) உடன்படிக்கைகளில் கைச்சாத்திடாமல் மடுகந்த தொலைத்தொடர்பு கோபுரத்தை பயன்படுத்துகின்ற 05 செயற்பாட்டாளர்களிடம் இருந்து 2011 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை கிடைத்த ரூபா 22,097,446 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்காக அவர்களிடம் இருந்து பெறவேண்டிய ரூபா 2,678,603 தொகை பெறவேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளவில்லை. மடுகந்த கோபுர செயற்பாட்டாளர்கள் 05 பேர்களினால் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்த போதிலும், செலுத்துவதற்கான இணக்கப்பாட்டின் அடிப்படையில் அந்த பணம் தீர்க்கப்பட்டுள்ளதுடன், 2011 முதல் 2019 ஆம் ஆண்டு வரை சகல அறவிட வேண்டிய பணமும் மீளாய்வாண்டின் போது கணிப்பிடப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதுடன், அவற்றை அறிவிக்கும் அறிவித்தல் முறையில் செயற்பாட்டாளர்களுக்கு அனுப்பி பணத்தை செலுத்தியதன் பின்னர் வரி பட்டியல் விநியோகிக்கப்பட்டு அவை கிடைக்கப் பெற்ற மாதத்தின் போது காசு அடிப்படையில் அறிக்கையிட்டு உரிய வரி தொகையும் சரியான பிரகாரம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் பெறுமதிகளை சரியாக வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (இ) தனியார் கம்பனியொன்றினால் 2012 பெப்ரவரி முதல் 2020 | மொபிடல் நிறுவனத்தினால் 2012 பெப்ரவரி 14 முதல் 2020.12.31 வரையான பணம் | பெறவேண்டிய வருமானங்கள் நிதிக் கூற்றுக்களின் மூலம் |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் வரை மடுகந்த தொலைத் தொடர்பு கோபுரத்தில் இருந்து பெறப்பட்ட வசதிகளுக்காக 2021 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற ரூபா 7,089,343 தொகை கிடைக்க வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஏப்ரல் 21 ஆம் திகதி செலுத்தப்பட்டுள்ளது. | சரியாக வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | உரித்து உறுதியுடன் அம்பாந்தோட்டை தொலைத் தொடர்பு மத்திய நிலையம் அமைந்துள்ள காணியின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 45,000,000 பெறுமதியான 112 ஏக்கர் 01 ரூட் 10.5 பேர்ச் காணியிலிருந்து அண்ணளவாக 69 சதவீதம் பிரதேச சபை கைப்பற்றியிருந்த போதிலும், அதற்குரிய சீராக்கங்கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளவில்லை. பணம் ஒன்று செலுத்தப்படாமல் 2017 ஆம் ஆண்டில் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 44,000,000 தொகையான இந்த மதிப்பீட்டு பெறுமதி மாத்திரம் காணப்படுகின்றமையினால் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் ஏனைய காணிகளுடன் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம்.<br><br>கதிரான காணியின் உள்ளபடியான நிலை நிதிக் கூற்றுக்களில் குறிப்புக்கள் மூலம் இடப்பட்டுள்ளதுடன், ஆணைக்குழுவிற்குரிய பகுதி கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம் மொத்த சொத்து வகுப்பும் மீள்மதிப்பீடு செய்யும் தேவையொன்று காணப்படுகின்றது. | சகல சொத்துக்களும் நிதிக் கூற்றுக்களின் மூலம் சரியாக வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (உ) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 04 அரச நிர்வானங்களில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 161,033,612 தொகையான கடன் மீதி காணப்பட்ட போதிலும், அந்த நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ஒரு நிறுவனத்தில் மாத்திரம் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 4,435,922 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன், ஏனைய நிறுவனங்களுடன் | இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் இருந்து அறவிட வேண்டிய தொகை ரூபா 145,283,350 தொகையை அறவிடுவதற்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஏனைய 03 அரச நிறுவனங்களில் தீர்க்கப்படாதிருந்த அந்த தொகை தொடர்பாக அவ்வப் போது மீள் நினைவூட்டல் கடிதமும் அனுப்பப்பட்ட போதிலும். பதிலொன்று அல்லது அவ்வாறான மீதியொன்று புத்தகங்களின் வெளிப்படுத்தப்படாதிருந்ததாகவு | கடன்பட்டோர் மீதி காணப்படுகின்றமை மற்றும் அவற்றின் பெறுமதிகள் சரியான இருக்கின்றமையை உறுதிப்படுத்தி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

கடன்கொடுத்தோர் மீதி காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ம் அறிவிக்கப்படவில்லை.

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| காணி | 103,863,771 | நாளது வரையாக்கப்பட்ட நிலையான சொத்து பதிவேடு அல்லது ஏனைய தொடர்புடைய எழுத்து மூல சான்றுகள். | ஏற்றுக்கொள்கின்றோம். அடுத்து வரும் ஆண்டின் கணக்காய்வின் போது அதனை தயாரித்து வழங்கும் இயலுமை தொடர்பாக கண்டறிவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | சொத்துக்களின் இருப்பு மற்றும் பெறுமதிகள் எழுத்து மூல சான்றின் மூலம் உறுதிப்படுத்தக் கூடிய வகையில் பதிவேடுகள் மற்றும் தகவல்கள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| கடன்பட்டோர் | 4,125,687 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம். | ஏற்றுக்கொள்கின்றோம். தெரிவு செய்யப்பட்ட சகல மாதிரிகளுக்குரிய சகல கடன்பட்டோர்களுக்கும் கடன்பட்டோர் மீதியை உறுதிப்படுத்தி அவர்களுக்கு நேரடியாக பதில் அளிக்குமாறு கோரி பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. | கடன்பட்டோர் மீதிகளை உறுதிப்படுத்தி பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பெறவேண்டிய கணக்கின் ஆரம்ப மீதியில் உள்ளடங்கிய கம்பனியில் இருந்து அறவிட வேண்டிய ருபா 6,350,303 தொகை 2021 யூலை 13 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | Lanka Cable Satellite Network Ltd. LCSN நிறுவனம் செலுத்தாத தொலைத் தொடர்பு வரியை அறவிடுவதற்கு சட்டப் பிரிவின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார கடன்பட்டோர் மீதி ரூபா 373,509,522 ஆக இருந்ததுடன், மேலதிகமாக அறவிடப்பட்ட ரூபா 2,177,058 தொகை கடன்பட்டோர் மீதியில் உள்ளடங்கியிருந்த போதிலும், அதனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிகமாக அறவிடப்பட்ட மீதி மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக இல்லாதிருந்தமையை அறியத்தருகின்றோம். | கடன்பட்டோர் மீதி தீர்த்து வைக்கப்பட வேண்டும். |
| (இ) | உத்தியோகத்தர்களுக்கு வேலை நீக்கம் செய்யப்பட்ட காலத்தில் படியாக 2013 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 424,000 தொகை 2019 ஆகஸ்ட் 29 ஆம் திகதிய ஒழுக்காற்று கட்டளையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் மீள அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போது தவறியிருந்தது. | ஒழுக்காற்று கட்டளையின் பிரகாரம் மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை மீண்டும் செலுத்துமாறு அறிவிக்கப்பட்ட போதும் செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டிருந்தது. பணிக் கொடை கணிப்பீட்டின் போது கழித்துக் கொள்வதற்கும் சட்டத்தின் பிரகாரம் சேவைபெறுனருக்கு சட்ட ரீதியான இயலுமை காணப்படாதிருந்ததாக தொழில் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். | படிகள் செலுத்துதல் சரியாக மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன், சட்டரீதியான உரித்து இன்றிய கொடுப்பனவுகளை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

---

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆவது பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் | 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஆணைக்குழுவின ால் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 1,500 மில்லியன் தொகைக்காக | ஏற்றுக்கொள்ளவில்லை. 1996 இன் 27 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் சட்டத்தில் 22(ஊ) பிரிவின் பிரகாரம் நிதியமொன்றை வைத்துக் | சுற்றறிக்கையின் பிரகாரம் தற்காலிகமாக மேலதிக நிதியை முதலீடு செய்வதற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெறப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 8.2.2 ஆம் பிரிவு | நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெறப்பட்டிருக்கவில்லை. | கொள்ளமுடியுமென குறிப்பிடப்பட்டுள்ளதுடன், 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு சொந்தமாக மிகைப் பணமொன்று காணப்படவில்லை. சட்டத்திற்கு இணங்கிய பணிகளுக்காக மாத்திரம் மிகவும் குறுகிய கால தற்காலிக நிதியம் ஒன்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதியம் நடைமுறைக் கணக்கில் பேணிச்செல்லப்படாமல் ஆக்கபூர்வமாக குறுங்கால முகாமைத்துவம் செய்யப்பட்டதுடன், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முதலீட்டு நிதியமொன்றின் நோக்குடன் மேற்கொள்ளப்படாதிருந்தமையையும் அறியத்தருகின்றோம். அவ்வாறே 2011.06.09 ஆம் திகதி இந்த தற்காலிக நிதியத்தை சரியாக நிதி முகாமைத்துவம் செய்வதற்கு அனுமதி கோரி பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் | | |

சுற்றறிக்கை

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 9.3 ஆம் பிரிவு | 03 மாதங்களை விஞ்சாத கால எல்லையில் பதிற்கடமை பதவிக்கு நியமிக்கப்பட முடியுமாக இருந்த போதிலும், அதற்கு முரணாக 08 பதிற்கடமை நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | தற்போது மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்பு நடைமுறையின் திருத்தங்கள் முடிவடைந்ததும், இந்த பதவிக்காக நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதிற்கடமை பதவிக்கான நியமன செயற்பாடுகள் சுற்றறிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | 9.12 ஆம் பிரிவு | ஆணைக்குழுவில் அமுல்படுத்தப்பட்ட மருத்துவ காப்புறுதிக்காக பொது முயற்சிகள் திணைக்களத்தினதும், பொது திறைசேரியினதும் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரம் ஒன்று பெறப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிற்காக காப்புறுதி தவணையாக காப்புறுதி கம்பனிக்கு ரூபா 55,256,869 தொகை செலுத்தப்பட்டுள்ளதுடன், ஆணைக்குழுவின் 235 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 26,176,701 தொகை காப்புறுதி | ஆணைக்குழுவின் பதவியணியினருக்காக செலுத்த வேண்டிய சம்பளம் மற்றும் படிகள் தொடர்பாக தீர்மானிப்பதற்கு 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத் தொடர்புகள் (திருத்தப்பட்ட) சட்டத்தின் 22(இ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க சுற்றறிக்கை விநியோகிக்கப்படுகின்ற போது ஆயுள் மற்றும் மருத்துவ காப்புறுதி உத்தேசத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தமையால் பொதுத் திறசேரியின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | சுற்றறிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கம்பனியினால் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. | | |
| (iii) | 9.14.2 ஆம் பிரிவு | ஆட்சேர்த்தல் நடைமுறைக்காக பொது முயற்சிகள் திணைக்களத்தினதும், திறைசேரி செயலாளரினதும் இணக்கப்பாடு பெறப்படாதிருந்ததுடன், ஆணைக்குழுவினால் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் நிறுவனத்தின் நிறுவக கட்டமைப்பு மதிப்பீடு செய்யப்பட்டு மீள்கட்டமைத்தல் கணக்காய்வு குழுவின் ஆலோசனையின் அடிப்படையில் விஷேட குழுவொன்று நியமித்ததன் பின்னர் அதற்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், அதன் ஆலோசனைச் சபையினால் இந்த நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுகின்றது. சிக்கலான இந்த பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (இ) | 2007 யூன் 01 ஆந் திகதிய என்எஸ்சீசீ/3/ஏபீசீ/24 ஆம் இலக்க தேசிய சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் கடிதம் | பதவி நிலை தரமல்லாத பதவியணியிருக்காக அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த போக்குவரத்து படியான ரூபா 2,000 இனை விஞ்சி ரூபா 6,000 வீதம் செலுத்தப்பட்டமையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 8,764,000 தொகை மேலதிகாமாக | 1996 இன் 27 ஆம் இலக்கம் இலங்கை தொலைத் தொடர்புகள் (திருத்தப்பட்ட) சட்டத்தின் 22 இ (1) ஆ பிரிவில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பிரகாரம் 2010 மார்ச் மாதம் 11 ஆம் திகதிய 2KX.189.15(17) ஆம் இலக்கம் மற்றும் ஆணைக்குழு தீர்மானத்தின் படி பதவிநிலை தரமல்லாத பதவியணியினருக்காக போக்குவரத்துப் படி ரூபா 6,000 செலுத்துதல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | போக்குவரத்துப் படி செலுத்துதல் அங்கீகாரத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்து சேவைகள் சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தி | சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் பரிந்துரை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாமல் பதவியணியினருக்கு ஊக்குவிப்புப் படி, வீட்டு வாடகை படிகள் பயன்படுத்தப்படாத விடுமுறைகளுக்கான படிகளாக ரூபா 77,621,496 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | சட்டத்தின் 22 (இ) பிரிவின் பிரகாரம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்ததுடன் ஆணைக்குழுவிற்கு சம்பளம் மற்றும் படிகள் தீர்மானிப்பதற்கான அதிகாரம் அந்த சட்டத்தின் மூலம் கையளிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 28,028,050,762 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 37,883,540,711 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 9,855,489,949 வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு அனுமதி பத்திர கட்டண வருமானம், தொலைத் தொடர்பு வரி வருமானம் மற்றும் தொலைத்தொடர்பு அபிவிருத்தி கட்டணம் ரூபா 9,422,955,136 இனால் குறைவடைந்தமை மற்றும் வெளியே செல்கின்ற உள்நாட்டு நுழைவு கட்டணத்தின் அடிப்படையிலான வரி வருமானம் அறவிடப்படாமை என்பன பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

ஆணைக்குழுவின் வருமானம் மற்றும் செலவினங்களை கடந்த வருடத்துடன் ஒப்பீடு செய்யும் போது கவனத்தில் கொள்ளக் கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| விபரம் | 2020.12.31 இல் | 2019.12.31 இல் | வேறுபாடு குறைவு/(அதிகரிப்பு) | வேறுபாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|
| ------------- | ------------- | ------------- | ------------- | ------------- |
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| அனுமதிப் பத்திர கட்டண வருமானம் | 12,036,758,914 | 16,175,312,122 | (4,138,553,208) | (26) |
| தொலைத்தொடர்பு வரி வருமானம் | 10,826,164,612 | 15,065,669,041 | (4,239,504,429) | (28) |
| தொலைத் தொடர்பு அபிவிருத்தி கட்டணம் | 4,292,953,440 | 5,337,850,939 | (1,044,897,499) | (20) |
| வெளியே செல்கின்ற உள்நாட்டு நுழைவுக் கட்டணத்தின் அடிப்படையிலான வரி வருமானம் | - | 192,765,504 | (192,765,504) | (100) |
| மொத்த வருமானம் | 29,000,860,956 | 38,575,208,162 | (9,574,347,206) | (25) |
| மொத்த செலவினம் | 972,810,192 | 691,667,451 | 281,142,741 | 41 |
| ஆண்டின் வரிக்கு முன் இலாபம் | 28,028,050,762 | 37,883,540,711 | (9,855,489,949) | (26) |

(அ) 2018 நவம்பர் 05 ஆம் திகதி மற்றும் 2019 திசெம்பர் 01 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் தொலைத் தொடர்வு சரி 25 சதவீதம் முதல் 11.25 சதவீதம் வரை குறைவடைந்தமையின் காரணமாக தொலைத் தொடர்பு வரி வருமானம் ரூபா 15,065,669,041 முதல் ரூபா 10,826,164,612 வரை ரூபா 4,239,504,429 இனால் குறைவடைந்தமை, 2019 யூன் 11 ஆம் திகதி முதல் அமுல்படும் வகையில் வெளியே செல்கின்ற உள்நாட்டு நுழைவு கட்டணத்தின் அடிப்படையிலான வரி அகற்றப்பட்டமை மற்றும் ஸ்மாட் போன் பயன்பாடு, ஓவர் த டொப் (Over the top) இலவசமாக பயன்படுத்த முடியுமான மொபைல் அப்ளிகேசன் இன் பயன்பாடு உயர்வடைந்து சென்றமையும் வருமானம் குறைவடைந்தமைக்கு தாக்கமளித்திருந்தது.

(ஆ) ஆணைக்குழுவின் மொத்த செலவினமான ரூபா 739,137,932 தொகையில் நிர்வாக மற்றும் செயற்பாட்டு செலவினங்களுக்காக ரூபா 679,034,945 தொகை அதாவது 92 சதவீதம் செலவிடப்பட்டிருந்ததுடன், அதில் பதவியணியினர் சம்பளம் மற்றும் படிகளுக்காக ரூபா 431,252,335 தொகை அதாவது 64 சதவீதம் அதில் உள்ளடங்கியிருந்தது. எவ்வாறாயினும் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதன் பிரதான நோக்கமான தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தலுக்காக மொத்த செலவினத்தில் ரூபா 54,779,057 தொகை அதாவது, 7 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஹந்தான பெயர் சரிபார்த்தல் நிலையத்தில் அமைந்துள்ள 6.21 பேர்ச் அளவான காணியின் உரித்தை கையேற்பதற்காக 1999 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது அதன் மதிப்பீட்டு பெறுமதி மற்றும் ஏனைய செலவினங்களுக்காக ரூபா 345,502 தொகை தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும். அதன் உரித்து மீளாய்வாண்டின் போதும் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் பிரதான அலுவலகம் மற்றும் கொக்காவில் பல்நோக்கு நிலையத்தில் அமைந்துள்ள காணிகளின் உரித்துறுதியோ அல்லது வாடகை உடன்படிக்கையோ மீளாய்வாண்டில் இறுதி வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை. | ஹந்தான பெயர் சரிபார்த்தல் நிலையம், உரிய கொடுப்பனவுகள் யாவும் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், சின்னக்கரை உரித்துறுதியை பெற்றுக் கொள்வதற்காக தேவையான அங்கீகாரம் பெற வேண்டும் என தேசிய வீடமைப்பு அதிகார சபை அறிவித்திருந்தது. கொக்காவில் பல்நோக்கு நிலைய காணியை கையளிப்பதற்கான நடவடிக்கைகளைச் செய்யுமாறு காணி ஆணையாளர் நாயகத்தினால் பிரதேச செயலாளரிடம் கோரிக்கைவிடப்பட்டு மீள் நினைவூட்டலும் அனுப்பப்பட்டுள்ளது. | சொத்துக்களின் உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கொக்காவில் தொலைத் தொடர்பு கோபுரங்களை பயன்படுத்துகின்ற 03 அரசாங்க நிறுவனங்களில் இருந்து 2012 ஆம் ஆண்டு முதல் அறவிட வேண்டிய ரூபா 91,929,931 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக சட்ட பிரிவினால் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அந்த நிறுவனத்தின் நிலுவையை செலுத்துதல் தொடர்பாக அந்த நிறுவனம் மற்றும் ஊடக அமைச்சிற்கும் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்ட போதும் இதுவரை எழுத்து மூல பதில் கிடைத்திருக்கவில்லை. | அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபரகணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அம்பாந்தோட்டை தகவல் தொழில்நுட்ப பூங்காவில் தொலைத் தொடர்பு மத்திய நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ஆணைக்குழுவினால் ஒப்பந்தகாரருடன் 2014 யூலை 28 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை ஆணைக்குழுவினால் 2016 ஆகஸ்ட் 10 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன், அந்த தீர்மானத்திற்கு எதிராக மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட இழப்பீடு ரூபா 706,666,172 தொகைக்காக ஒப்பந்தகாரரினால் பிணக்குகள் தீர்க்கும் சபைக்கு முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படும் திகதியில் செயற்திட்டத்தின் பௌதீக செயல்முன்னேற்றம் 33.1 சதவீதம் ஆக இருந்ததுடன், அதற்காக செலவிடப்பட்ட ரூபா 684 மில்லியன் தொகையும் பயனற்ற செலவினமாக இருந்தது. | இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டிருந்ததுடன், மிகுதி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக காணப்படுகின்ற சட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சட்ட பிரிவு நடவடிக்கை எடுக்கின்றது. | ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டமையினால் ஏற்பட்ட பயனற்ற செலவினங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பிரதான அலுவல கட்டிடத்தை நவீன மயப்படுத்தும் ஆரம்ப நடவடிக்கைகளின் மதியுரைக் கட்டணமாக ரூபா 10,057,910 தொகை 2015 சனவரி 25 ஆம் திகதி மொரட்டுவை பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், இது வரையும் கட்டிடத்தை நவீன மயப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் முகாமைத்துவத்தினால் பிரதான அலுவலக கட்டிடத்தை நவீன மயப்படுத்துவதற்காக மதியுரையாளர் நிறுவனம் ஒன்றான மொரட்டுவை பல்கலைக்கழகத்திற்கு | நிர்மாண தேவைகள் சரியான பிரகாரம் இனங்காணப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ல. மேலும், பிரதான அலுவல கட்டிடத்தை நவீன மயப்படுத்தும் ஒப்பந்தத்திற்கு பதிலாக பிரதான கட்டிடத்தின் நீடிப்பாக ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளப்படுகின்றமையினால் நடைமுறை வேலையாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட மதியுரைக் கட்டணம் பயனற்ற செலவினமாக இருந்தது. | பணம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அதன் ஆரம்ப வேலை நடவடிக்கைகள் மொரட்டுவை பல்கலைக்கழம் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பின்னர் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் முகாமைத்துவத்தால் புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், அதன் பின்னர் பிரதான அலுவலக கட்டிடத்தை நவீன மயப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |

## 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 1,266,700,000 பெறுமதியான 06 பெறுகை நடவடிக்கைகள் தேவையற்று இருந்தமை மற்றும் பணிப்பாளர் நாயகம் கைவிட்டமையினால் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், தேவைகள் சரியாக இனங்காணப்படாமல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டமையினால் பெறுகைகளை ஏனைய தேவை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு இருந்த சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தன. அவ்வாறே பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 1,140,550 பெறுமதியான 06 பெறுகைகள் | தற்போது தேவையொன்று காணப்படாதிருந்ததாக நிர்வாக பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளமையினால் அந்த பெறுகைகளை கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாதீட்டு கட்டுப்பாட்டு பிரிவிற்கு பெறுவனவுகள் தாமதமடைந்தமை, கொரோனா வைரஸ், வரிசை அமைச்சின் மாற்றம், பெறுகைக் குழுவில் காணப்பட்ட குறைபாடுகள் போன்ற காரணங்களினால் செயற்திட்டத்தை மீளாய்வாண்டு காலத்தில் அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன், ரூபா 1,083,495,000 பெறுமதியான 34 பெறுகை நடவடிக்கைகளை அமுல்படுத்தாமைக்கான காரணமோ அல்லது அமுல்படுத்தப்பட்டமையோ காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | ஆணைக்குழுவின் ஊழியர் கட்டமைப்பு, நிறுவன கட்டமைப்பு மற்றும் ஆட்சேர்த்தல் முறைமைகளை மீள் திருத்துவதற்காக மதியுரை சேவையொன்றை பெற்றுக் கொள்வதற்கு 2020 ஒக்டோபர் 20 ஆம் திகதி இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்துடன், கைச்சாத்திடப்பட்ட ரூபா 2,992,330 பெறுமதியான உடன்படிக்கையின் காலம் 2021 சனவரியில் முடிவடைவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 1,490,166 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2021 யூன் வரையிலும் உரிய பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 இன் காரணமாக செயற்பாடுகளின் ஆரம்ப நடவடிக்கைகளுக்கு பாதிப்பாக இருந்ததுடன், இந்த பணிகள் மிகவும் சிக்கலான செயற்பாடாகும். இது வரையில் உத்தேசிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை வரைவு சமர்ப்பிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவின் தலைவர்களுடன் கலந்துரையாடி தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | ஆணைக்குழுவின் ஊழியர் கட்டமைப்பு, நிறுவன கட்டமைப்பு மற்றும் ஆட்சேர்த்தல் முறைமைகளை மீள் திருத்துவதற்கான நடவடிக்கைகள் விரைவாக பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

**3.5 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தாமரைக் கோபுர செயற்திட்டம்<br>2010 ஒக்தோபர் 27 ஆந் திகதிய 10/2473/401/031 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தாமரைக் கோபுர நிர்மாண ஒப்பந்தம் 02 சீனக் கம்பனிகளுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், 2012 சனவரி 03 ஆந் திகதி தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு இந்த கம்பனியுடன் அ. டொலர் 104,300,000 பெறுமதியான ஒப்பந்தத்தில் | | |

கைச்சாத்திட்டிருந்தது.
உடன்படிக்கையின் பிரகாரம் 2012 நவம்பர் 12 முதல் 912 நாட்களில் இந்த ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், ஆணைக்குழு 2017 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை ஒப்பந்த காலத்தை நீடித்திருந்தது.

இந்த நிர்மாணத்திற்கான நிதியத்தை வழங்குவதற்கு 2012 செப்டம்பர் 17 ஆம் திகதி ஆணைக்குழு EXIM வங்கியுடன் கடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது. அந்த கடன் உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்த பெறுமதியில் 85 சதவீதம் அதாவது அ.டொலர் 88.655 மில்லியன் வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆகஸ்ட் 18 ஆம் திகதி வரையில் கடன் தொகை பெறப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. நிர்மாண ஒப்பந்தம் உரிய கால அட்டவணையின் பிரகாரம் பூர்த்தி செய்யாமையின் காரணமாக மொத்த கடன் தொகையும் குறித்துரைத்த பிரகாரம் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்ததுடன், உரிய காலத்தின் போது அ.டொலர் 67.260 மில்லியன் அதாவது, கடன் தொகையில் 76 சதவீதம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | ஆணைக்குழு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் 2012 சனவரி 23 ஆம் திகதி கைச்சாத்திட்ட புரிந்தணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் தாமரைக் கோபுரம் நிர்மாணிக்கப்பட்ட காணி 7 ஏக்கர் 2 ரூட் 8.41 பேர்ச் ஆக இருந்த போதிலும், நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய காணியின் அளவு 4 ஏக்கர் 3 ரூட் 24.47 பேர்ச் ஆக இருந்தமை ஆணைக்குழுவினால் | ஏற்றுக்கொள்கின்றோம். அவதானிப்பு சரியானதாகும். | சரியான தரவுகளை உள்ளடக்கும் வகையில் பதிவேடுகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) | இந்த செயற்திட்டத்தின் நிதி சாத்தியவள ஆய்வு அறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டு முதல் செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும், அதன் மூலம் முதலாவது 05 வருடங்களுக்காக வருடத்திற்கு ரூபா 1,685 மில்லியன் வருமானமும், இரண்டாவது 05 வருடங்களுக்காக வருடத்திற்கு ரூபா 1,918 மில்லியன் வருமானமும் உழைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்ட நடவடிக்கைகள் தாமதம் அடைந்ததன் அடிப்படையில் அந்த வருடாந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. நிதி சாத்தியவள ஆய்வு அறிக்கையின் பிரகாரம் உழைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தின் அடிப்படையில் கணிப்பிடும் போது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இழக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 9,639,408,102 ஆகும். | சாத்தியவள ஆய்வு அறிக்கையின் பிரகாரம் வருமானத்தை உழைப்பதற்கு முடியாதிருந்தது. | எதிர்பார்த்த இலக்கை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | ஆரம்ப திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் கடன் தவணை செலுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 7,877 மில்லியன் கடன் தவணைப் பணமும் வட்டியும் ஆணைக்குழுவின் நிதியில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு கடன் மற்றும் தவணைப் பணம் செலுத்தியதன் காரணமாக தொலைத் தொடர்பு சட்டத்தின் பிரகாரம் ஒன்றிணைந்த நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட்ட அனுப்புதல்கள் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017, | TRC/CEIC/01.2011 என்ற ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் தாமதடைந்ததைக் காரணமாகக் கொண்டு தற்போதும் தாமதக் கட்டணமாக அ.டொலர் 10.43 மில்லியன் தொகை ஒப்பந்தகாரரின் உள்ளக கொடுப்பனவுகளில் கழிப்பதன் மூலம் அறவிடப்பட்டிருந்தது. உரிய ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் தாமதமடைந்தமையால் அறவிடக் கூடிய ஆகக் கூடிய தாமதக் | செயற்திட்டத்தின் ஆரம்ப திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 5,200 மில்லியன், ரூபா 6,150 மில்லியன், ரூபா 19,050 மில்லியன் மற்றும் ரூபா 23,000 மில்லியன் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 53,400 மில்லியன் தொகை குறைவடைந்திருந்தது. | கட்டணம் அதுவாகும். மேலும் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு கொழும்பு தாமரைக் கோபர வணிக மயப்படுத்தலுக்காக ஆலோசனைக் குழுவொன்றை நியமித்திருந்தது. அந்த குழு தேவையான திட்டங்களை தயாரிக்கின்றது. | |
| (iv) | 2019 செப்டம்பர் 16 ஆம் திகதி ரூபா 11,325,012 செலவில் தாமரைக் கோபுரம் உத்தியோகபூர்வமாக திறக்கப்பட்ட போதிலும், இதுவரையும் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு சரியானதாகும். | தாமரைக் கோபுரம் ஆணைக்குழுவிற்கு கையேற்கப்பட்டு வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் தாமரைக் கோபுர வணிக மயப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு புறம்பாக ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 13,067,971 தொகையான படிகள் இதுவரை ஸ்தாபிக்கப்படாத கம்பனியில் இருந்து அறவிடும் அடிப்படையில் பெறவேண்டிய கணக்குகளாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆணைக்குழு தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஸ்தாபிக்கப்படாத கம்பனியில் இருந்து செலவினங்களை மேவுகை செய்தல் ஆபத்தானதாக இருந்தமையால் அதனை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2010 ஒக்டோபர் 27 ஆம் திகதிய 10/2473/401/031 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தாமரைக் கோபுர நிர்மாணத்திற்காக மதியுரை சேவையினை பெற்றுக் | ஒப்பந்த காலத்தை நீடிப்பதுடன் கம்பனி செயற்திட்டத்தின் மதியுரைச் சேவை உடன்படிக்கையையும் நீடிப்பதற்கு ஏற்பட்டிருந்ததுடன், | முறையான அங்கீகாரத்துடனும் வெளிப்படையானதாகவும் மதியுரைக் கட்டணம் செலுத்துதல் வேண்டும். |

கொள்வதற்காக மொறட்டுவை பல்கலைக்கழகத்துடன் உடன்படிக்கை செய்வதற்கான அங்கீகாரம் உரித்தாகியிருந்தது. அதன் பிரகாரம் 2013 பெப்ரவரி 15 ஆம் திகதி மதியுரைச் சேவையினை பெற்றுக் கொள்வதற்காக இருதரப்பினருக்கும் இடையே கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கை மதியுரைக் கட்டணமாக ஒப்பந்த தொகையில் 1.5 சதவீதம் அதாவது ரூபா 198.7 மில்லியன் செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்தது. அந்த தொகையில் ரூபா 150 மில்லியன் மாத்திரம் மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், 2015 நவம்பர் 26 ஆம் திகதிய 2k15.219.13(ii) ஆம் இலக்க ஆணைக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் மதியுரைச் சேவை உடன்படிக்கை 2017 ஒக்டோபர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாதாந்தம் ரூபா 03 மில்லியன் வீதம் ரூபா 72 மில்லியன் தொகை மொறட்டுவை பல்கலைக்கழத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கை நீடிக்கப்பட்ட காலம் முடிவடைந்த பின்னரும் 2017 நவம்பர் 01 ஆம் திகதி முதல் 2019 செப்டம்பர் 16 ஆம் திகதி வரையான காலத்திற்காக ரூபா 59.8 மில்லியன் தொகை மதியுரைக் கட்டணமாக மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. 2019 செப்டம்பர் 16 ஆம் திகதி தாமரைக் கோபுரம் திறக்கப்பட்டதன் பின்னர் தாமரைக் கோபுரம் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்படாமையின் காரணமாக 2019 ஒக்டோபர் 01 முதல் 2020 திசெம்பர் 31 வரையான காலப் பகுதிக்காக ரூபா 28.6 மில்லியன் மதியுரை கட்டணமாக மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு அதற்காக ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

கொழும்பு தாமரைக் கோபுர செயற்திட்டத்தின் உடன்படிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் நிர்மாணங்களை பூர்த்தி செய்து ஒப்பந்தத்தின் நியதிகள் உரிய பிரகாரம் பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு கையளிப்பதற்கு தவறியிருந்தது. இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் ஒப்பந்தகாரருடன் ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் மொறட்டுவை பல்கலைக்கழகம் செயற்திட்டத்தின் பொறியியலாளர் ஆகும். மேலும், அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு கையளிக்கும் வரை செயற்திட்ட பொறியியல் ஒப்பந்தத்தில் உள்ள பணிகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக தொடர்ச்சியான சேவையினை பெற்றுக் கொள்ளல் செயற்திட்ட உரிமையாளரின் பொறுப்பாகும். அதன்

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் செலுத்தப்பட்டுள்ள ஒட்டு மொத்த மதியுரைக் கட்டணத்தின் பெறுமதி ரூபா 310.4 மில்லியன் ஆகும். | பிரகாரம் செயற்திட்டத்தின் ஒப்பந்தகாரர் அவ்வப்போது வழங்கிய செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்தி செய்யும் இலக்குகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் பொறியியலாளரின் பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட காலமும் நீடிக்கப்பட்டுள்ளது. | |

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவின் வெற்றிடங்கள் 70 ஆக இருந்ததுடன், ஆணைக்குழுவின் செயலாளர் பதவி 09 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் வெற்றிடமாக காணப்பட்டது. அவ்வாறே அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்படாத உதவி கணக்காளர் பதவிக்காக நிரந்தர அடிப்படையில் இரண்டு உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு மீளாய்வாண்டின் போது சம்பளம், வீட்டு வாடகை படிகள், ஊக்குவிப்பு படிகள் மற்றும் போக்குவரத்து படிகளாக ரூபா 1,873,503 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தற்போது காணப்படுகின்ற ஆட்சேர்ப்பு நடைமுறையினை திருத்துதல், ஆரம்ப நிலையின் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படாதிருப்பதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டிருந்தமை யை உள்ளடக்கிய காரணங்களினால் பதவிகளை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே தற்போது பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்குரிய விண்ணப்ப அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. | வெற்றிட பதவிகளை நிரப்புவதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்துதவற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 7,736 மில்லியன் பெறுமதியான 45 பணிகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன், அதன் செயல்முன்னேற்றம் 0.1 வீதம் முதல் 90.2 சதவீதம் வரையாக இருந்தது. | 45 பணிகளையும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமைக்கும், அதன் செயல்முன்னேற்றம் 0.1 வீதம் முதல் 90.2 சதவீதம் வரை காணப்பட்டமைக்கும் மற்றும் எதிர்பார்த்த பிரகாரம் செயல் முன்னேற்றத்தை பெற்றுக் கொள்ளாமைக்கும் இடையூறுகள் மற்றும் தவிர்க்க முடியாத தொற்றுநோய் நிலைமைகளும் காரணமாக இருந்தது. எதிர்காலத்தில் நல்ல நிலைக்கு வரும் பின்புலத்தில், செயல் நடவடிக்கைத் திட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் செயல்முன்னேற்றத்தை உச்ச அளவில் பெற்றுக் கொள்வதற்கு பிரிவு தலைவர்களின் கவனத்திற்கும் மற்றும் உரிய செயற்பாடுகளின் செயல்முன்னேற்றம் பிரிவு மட்டத்தில் மீளாய்வு செய்யும் நடவடிக்கைகளை செய்வதற்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிறுவனத்தின் செயல் முன்னேற்றத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தரப்படுத்தல் பிரிவினால் 2019 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் தேவையான நிதிஏற்பாடு வழங்கப்படாமையினால் 2019 ஆம் ஆண்டில் தற்காலிகமாக கைவிடப்பட்ட சேவை பெறுனர்களின் தரத் தன்மையை கண்காணிப்பு செய்வதற்காக தேவையான | அமைச்சு மாற்றமடைந்தமையினால் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு நியமிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. எனினும் 2020 ஆம் ஆண்டில் அந்த உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக தொழில்நுட்ப மாதிரியுடன் உரிய வரைவு கேள்வி ஆவணங்கள், வரைவு பத்திரிகை அறிவித்தல்கள் | அமுல்படுத்துவதற்கு முடியுமான அத்தியவசியாமன செயற்திட்டங்களுக்காக வருடாந்த நிதி ஏற்பாட்டை ஒதுக்கி உரிய பணிகளை நிறைவேற்றுதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் மென்பொருளை கொள்வனவு செய்வதற்கு 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 400 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பரிந்துரைக் குழு அங்கத்தவர்களின் தகவல்களை உள்ளடக்கிய ஆவணங்கள் சனாதிபதி செயலகத்திற்கு அனுப்பபட்டுள்ளது. |

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 08 வகையான வருமானங்களுக்காக உள்ளபடியான சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 22,173,757,388 ஆகவும், பாதீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 31,418,431,056 ஆகவும் இருந்தமையால் பாதீடு செய்யப்பட்ட வருமானம் அடைந்து கொள்ளப்படாமை ரூபா 9,369,456,744 ஆகும். பாதீட்டில் உள்ளடக்கப்படாத 06 விடயங்களில் இருந்து ரூபா 253,477,080 தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன், 06 விடயங்களுக்காக ரூபா 5,270,841 செலவினம் செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,270,214,312 பெறுமதியான நிர்வாக மற்றும் ஒழுங்குபடுத்துதல் செலவின விடயங்கள் 38 இற்காக எந்தவொரு செலவினமும் செய்யப்படாதிருந்ததுடன், 07 விடயங்களுக்காக பாதீடு செய்யப்பட்ட பெறுமதியை விஞ்சி ரூபா 57,649,430 தொகை செலவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக வருடாந்த பாதீட்டை வெற்றிகரமான கட்டுப்பாட்டு சாதனமாக பயன்படுத்துவதற்கு தவறியிருந்தது. | வருமானங்கள் நிர்வாக பிரிவினால் வழங்கப்படுவதுடன் வருமான மதிப்பீடு சரியான தயாரிக்கப்படுவதுடன், பின்னர் அவை அரசியல், தொழில் நுட்ப, பொருளாதாரரீதியான, சுற்றாடல் மற்றும் போட்டித்தன்மை போன்றவற்றின் தாக்கங்களினால் மாற்றமடைதற்கு அநோகமான சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.<br><br>பாதீடு தயாரிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் வரையும் இந்த 02 வருமான வழிகள் காணப்படாதிருந்ததுடன், ‘‘கமட்ட சன்னிவேதனய’’ (‘‘கிராமத்திற்கு தொடர்பாடல்’’) செயற்திட்டத்திற்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொகை நாட்டில் காணப்பட்ட நிலைமையின் அடிப்படையில் செயற்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு முடியாமையினால் அந்த பணம் நிலையான வைப்பில் (ரூபா 1.5 பில்லியன்) வைப்புச் செய்யப்பட்டு நிலையான வைப்பு வட்டி வருமானமும் வருடாந்த பாதீட்டு தயாரிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் வரையிலும் எதிர்பார்த்த வருமானம் ஒன்றாக காணப்பட்டது. அவ்வாறே செலவின தலைப்பு பெயரில் பாதீட்டில் உள்ளடக்கப்படாதிருந்த | பாதீட்டை வெற்றிகரமான கட்டுப்பாட்டு சாதனமாக ஈடுபடுத்துதல் வேண்டும். |

போதிலும், அது அதற்குரிய ஒட்டுமொத்த செலவின தலைப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவ்வாறே நாட்டில் காணப்பட்ட covid நிலையின் இடையே சரியான பிரகாரம் அமுல்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருக்கவில்லை.